## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

## அசல் வழக்கு எண் – 139/2017

**வாதி தரப்பு சாட்சி–1 தனலெட்சுமி –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.01.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) எனது பாட்டா பெயர் பழனியாண்டி என்றால் சரிதான். அவருக்கு முருகன், வெள்ளையன் இருவரும் வாரிசுகள் என்றால் சரிதான். நான் முருகனின் மகள். 1ம் பிரதிவாதி வெள்ளையனின் மகள் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 520 ஆகும். தாவா சொத்தின் பழைய சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் அவரவர் அனுபவத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட பட்டாபடி பாத்தியம் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். எனது தகப்பனார் 1998ல் இறந்தார். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் எப்போது இறந்தார் என்றால், சுமார் 20 வருடங்களுக்கு முன்பு இறந்தார். சரியாக ஞாபகமில்லை. 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு எந்த திசையில் வசித்து வருகிறார்கள் என்றால், கிழக்கு திசையில் வசித்து வருகிறார்கள்.

2) பிரதிவாதிகள் வசித்து வரும் நிலத்தில் சர்வே எண் தெரியுமா என்றால், சர்வே எண் 520. 520 என்பது பட்டா எண்ணா என்றால் ஞாபகமில்லை. பிரதிவாதிகள் இடத்திற்கான பட்டா நகலை வாங்கி பார்த்தேனா என்றால் வாங்கியிருக்கிறேன். எனக்கு எத்தனை செண்ட் நிலத்திற்கு பட்டா வழங்கப்பட்டது என்றால், 5 செண்ட் நிலத்திற்கு வழங்கப்பட்டது. சாட்சி மீண்டும் தனக்கு 20 செண்ட் நிலத்திற்கு பட்டா வழங்கியதாக சொல்கிறார். பிரதிவாதிகளுக்கு எவ்வளவு நிலத்திற்கு பட்டா வழங்கினார்கள் என்றால் 5 செண்ட் நிலத்திற்கு பட்டா வழங்கினார்கள். தாவா சொத்திற்கு மேற்குபுறம்

யாருடைய நிலம் என்றால் ராஜீ நிலம். ராஜீ நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. ராஜீவிற்கு எத்தனை செண்ட் நிலத்திற்கு பட்டா கொடுத்திருக்கிறார்கள் என்றால் 5 செண்ட் நிலத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். பிரதிவாதிகள் குடியிருக்கும் வீடு எவ்வகையை சேர்ந்தது என்றால் ஓட்டு வீடாகும்.

3) பிரதிவாதி எத்தனை வருடமாக மேற்படி வீட்டில் வசிக்கிறார்கள் என்றால், சுமார் 20 வருடங்களுக்கு மேலாக வசிக்கிறார்கள். தாவாவை அகற்ற வேண்டும் என கேட்டுள்ள சுவர் மீதுதான் பிரதிவாதிகளின் வீட்டின் ஓடு வைக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். எனது சொத்திற்கான பட்டா என் பெயரில் வழங்கப்படுவதற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்றால், எனது தாயார் பழனியம்மாள் பெயரில் இருந்தது. தாவா சொத்தில் நான் எப்போது வீடு கட்டினேன் என்றால், 2014ம் வருடம் கட்டினேன். நான் வீடு கட்டுவதற்கு முன்பு எனது இடம் காலி மனையாக இருந்ததா என்றால், ஒரு கூரை வீடும், ஓட்டு வீடும் இருந்தது. அதை இடித்துவிட்டு வீடு கட்டினேன். எனது தாயார் பெயரில் பட்டா இருந்தததற்கான ஆவணமோ, கூரை வீடும், ஓட்டு வீடும் இருந்ததற்கான ஆவணமோ தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**